அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 106/2013

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஜூன் திங்கள் 19–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

நீ.சா.2 19.06.2025

பெயர் காயத்திரி கணவர் பெயர் விஜயகுமார்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை</u>:–

1, நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் ஆவடி தாசில்தார் ஆவேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 பட்டா எங்கள் தாலுகஅலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பட்டாவில் அயப்பாக்கம் கிராமத்திற்கு தாசில்தார் சைதாப்பேட்டை சேர்ந்தவர்கள் வழங்கியுள்ளார்கள் நான் தற்போதுதான் வேலையில் சேர்ந்துள்ளேன். மேற்படி பட்டா வழங்கப்பட்டது சம்மந்தமாக ஆவடி பிரிந்து இருந்ததா இல்லையா என்று நான் பார்த்து சொல்லவேண்டும். நான் இந்த வேலையில் 2012 வருடத்தில் சேர்ந்தேன். அயப்பாக்கம் கிராமம் ஆவடி தாலுக்காவில் எப்போது சேர்க்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. ஆவடி தாலுக்கா 2015 ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

2. 2015 ற்கு முன்பு அயப்பாக்கம் கிராமம் எந்த தாலுக்காவை சேர்ந்து இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 பட்டா வழங்கியதாக சொல்லப்படும் நடவடிக்கை செயற்குறிப்பு சம்பந்தபட்ட கோப்பு என்னால் நீதிமன்றத்தில் சமர்பிக்கமுடியுமா என்றால் முடியும். வா.சா.ஆ 3 பட்டா 1992 ல் சைதாபேட்டை தாலுக்கா தாசில்தாரரால் வழங்கப்பட்டது என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோப்புகளை நீதிமன்றத்தில் சமர்பிக்க எனக்கு 2 வாரகால அவகாசம் தேவை. வா.சா.ஆ 3 பட்டாவில் நிலம் புஞ்சைநிலமாக காட்டப்பட்டுள்ளது. சர்வே எண் 16 யை நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பாக நான் நேரடியாக பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன் ஆனால் அளக்கவில்லை.

3. நான் எவ்வாறு சர்வே எண் 16 யை அடையாளம் கண்டேன் என்றால் சர்வேயரை அழைத்து சென்றேன் அவர் என்னிடம் அடையாளம் காட்டினார். எனது கோப்பில் உள்ள விவரங்கள் சர்வே எண் 16 எவ்வளவு விஸ்திரனம் உடையது என்றால் 2 ஏக்கர் 62 சென்ட் ஆகும் . எனது கோப்புகளில் சர்வே எண் 16 புஞ்சைநிலங்களாக தான் காட்டப்பட்டுள்ளது. எப்போது இருந்து புஞ்சைநிலமாக வகைப்பாடு செய்யப்பட்டது என்றால் 1985 UDR சர்வேக்கு பிறகு புஞ்சைநிலமாக பதிவாகியுள்ளது. அதற்கு முன்பு என்ன வகைப்பாடு என்று ஆவணகாப்பகத்தில் உள்ள ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். சர்வே எண் 16 தற்போது 87 உட்பிரவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

4. சர்வே எண் 16 /1 ன் அ பதிவேடு **சா.சா.ஆ 1**

5.சர்வே எண்16/1A1A1AA1 சம்புபிரசாத்பெயரில் உள்ளஅடங்கல்**சா.சா.ஆ 2**

6.சர்வே எண் 16 ன் வரைபடம் **சா.சா.ஆ.3**

7.சர்வே எண் 16/1A1A ஆன சிட்டா **சா.சா.ஆ 4**

(சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)